# டெல்லி மாணவர்கள் போராட்டம் : கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆதரவு!

புதுடெல்லி, ஜூலை 24 -

டெல்லியில் மாணவர்கள் நடத்தி வரும் 'நீட்' தேர்வு குளறுபடிகளுக்கு எதிரான போராட்டத்திற்கு தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சென்று ஆதரவு அளித்துள்ளார்!

'நீட்' வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பல்வேறு தேர்வு குளறுபடிகளுக்கு பொறுப்பேற்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி காக்ரோச் ஜனதா கட்சி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்று வரும் இந்தப் போராட்டத்தில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இந்த நிலையில் திமுக எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் போராட்டக் களத்திற்கு நேரில் சென்று மாணவர்களுக்கு ஆதரவு அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியுள்ள தாவது:-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் இந்தப் போராட்டத்திற்கு துணை நிற்கிறோம். இதனை தெரியப்படுத்தும் விதமாக நாங்கள் போராட்டத்தில் கலந்து கொண்டோம்.

'நீட்' மாணவர்களுக்கு எதிரானது. அவர்களின் கனவுகளுக்கு எதிரானது. ஏழை மாணவர்களுக்கு எதிரானது. இதனால் நீட் தேர்வு கொண்டுவரப்பட்ட காலத்திலிருந்து தி.மு. கழகம் அதனை எதிர்த்து இருக்கிறது. அதனை எதிர்த்து நாங்கள் வழக்குகளும் போட்டு இருக்கின்றோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழ்நாட்டில் மீனவர்களைப் பாதிக்காத வகையில்

# கடல் காற்றாலைத் திட்டத்தை நிறைவேற்ற ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

### மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 24 -

தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் கொண்டுவரப்படும் கடல் காற்றாலை திட்டங்களால் பாதிப்பிற்கு உள்ளாகும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அத்திட்டம் நிறைவேற்றப் படுமா? என்றும் ஒன்றிய புதிய மற்றும் புதுப்பிக்க த்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாட்டின் கடலோர பகுதிகளில் குறிப்பாக கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களை ஒட்டிய பகுதிகளில் முன்மொழியப்பட்ட கடல் காற்றாலைத் திட்டங்கள் குறித்து ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார பாதிப்பு மற்றும் தாக்கம் தொடர்பாக விரிவான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறாயின், அதன் விவரங்கள் என்ன?

கடல் காற்றாலைத் திட்டங்களுக்கான தளங்களைத் தேர்வு செய்வதற்கு முன்பாக, பாதிக்கப்படக்கூடிய மீனவர்களுடன் சுதந்திரமான, முன்கூட்டிய மற்றும் தகவலறிந்த ஆலோசனைகள் (Free, Prior and Informed Consultation) மேற்கொள்ளப்பட்டு சட்டப்பூர்வமான பொது விசாரணைகள் நடத்தப்பட்டு ள்ளதா?

கடல் காற்றாலைத் திட்டங்களால் தமிழ்நாட்டின் மீன்பிடிப் தளங்கள், கடல்சார் பல்லுயிர் பெருக்கம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், அருகிவரும் உயிரினங்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் உணர்திறன் மிக்க கடலோரப் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய மேற்கொண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

இந்தத் திட்டங்களால் பாதிப்பிற்கு உள்ளாகும் மீனவர்கள் மற்றும் கடல்சார் சமூகத்தினருக்கான இழப்பீட்டை உறுதி செய்யவும்; வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் ஒன்றிய அரிசிடம் உரிய திட்டம் உள்ளதா? அப்படி இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டின் புதுப் பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடையும் அதேவேளையில், கடலோர சமூகங்களின் வாழ்வாதாரத்திற்கும் கடல்சார் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில், கடல் காற்றாலைத் திட்டங்களின் அமைவிடங்களை மறுபரிசீலனை செய்து, சுற்றுச்சூழ லுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் மாற்று இடங்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

## ரயில்வே சேவைகளில்

# உயர்ந்து வரும் உணவகச் செலவுகள் குறித்து பதில் என்ன?

### மக்களவையில் — ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 24 -

ரயில்வே உணவக சேவைகளில் உயர்ந்து வரும் செலவுகள் குறித்த அடிப்படைக் கவலைகளுக்கு நேரடியான பதிலைத் தவிர்ப்பதா என ஒன்றிய அரசுக்கு ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பியிள்ளார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ், வணிகப் பயன்பாட்டிற்கான LPG விலை உயர்வு மற்றும் பிற உள்ளீட்டுச் செலவுகள் அதிகரித்துள்ளதால், தமிழ்நாடு, குறிப்பாக ஈரோடு மற்றும் அதனை ஒட்டிய ரயில்வே கோட்டங்களில் செயல்படும் பேன்ட்ரி ஒப்பந்ததாரர்கள், உணவு விற்பனையாளர்கள் மற்றும் உரிமம் பெற்ற சேவை வழங்குநர்கள் மேற்கொள்ளும் ரயில்வே உணவக சேவைகள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன என்பதை ஒன்றிய ரயில்வே அமைச்சகம் ஆய்வு செய்துள்ளதா என்று விளக்கம் கோரினார்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் உயர்ந்து வரும் செயல்பாட்டு செலவுகள் மற்றும் விநியோகச் சங்கிலி சிக்கல்கள் தொடர்பாக ரயில்வே உணவக ஒப்பந்ததாரர்கள் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் கோரிக்கைகள் குறித்த விவரங்களையும் கேட்டுக் கொண்டார். அத்துடன், இந்திய ரயில்வே உணவகம் மற்றும் சுற்றுலா கழகம் (IRCTC) மற்றும் பிற அமைப்புகள் மூலம் தடையற்ற உணவக சேவையை உறுதி செய்வதற்கும், சிறு விற்பனையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் செயல்பாட்டு நிலைத்தன்மையை பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உயர்ந்து வரும் உள்ளீட்டுச் செலவுகளை கருத்தில் கொண்டு உணவக ஒப்பந்தங்கள், சேவைக் கட்டணங்கள் அல்லது விற்பனையாளர்களுக்கான ஆதரவு நடைமுறைகள் மறுஆய்வு செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு ரயில்வே அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:

இந்திய ரயில்வே, பயணிகள் சேவைகளின் அனைத்து அம்சங்களையும் தொடர்ந்து கண்காணித்து மறு ஆய்வு செய்து வருகிறது. மத்திய கிழக்கு

பிராந்தியத்தில் நிலவும் நெருக்கடியால் LPG கிடைப்பதில் நிலவும் சிக்கல் மற்றும் அதன் விலை உயர்வு ஏற்படுத்திய தாக்கமும் இதன் ஒரு பகுதியாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு உட்பட பல்வேறு உணவக உரிமம் பெற்றோர் சேவை சங்கங்கள் மற்றும் உரிமம் பெற்ற வழங்குநர்களிடமிருந்து இத்தகைய செயல்பாட்டு சவால்கள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. சேவையின் தரம் மற்றும் பயணிகளின் வசதியில் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

சேவை வழங்குநர்களுடன் காலந்தோறும் ஆலோசனை நடத்தி, உணவக சேவைகள் மற்றும் செலவு தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்து மறுஆய்வு செய்யப்படுகின்றன.

எல்பிஜி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களுடன் தொடர்ந்து ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவைக்கேற்ப போதுமான அளவில் எல்பிஜி கையிருப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது.

அவசர சூழ்நிலைகளில், சாத்தியமான இடங்களில் மின்சாரம் அல்லது இண்டக்ஷன் (Induction) அடிப்படையிலான தீயில்லா சமையல் முறைகளை பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சேவையின் தரத்தில் எந்தவித சமரசமும் இன்றி, செலவினங்களை கட்டுப்படுத்தும் வகையில் செயல்திறன் மேம்பாடு மற்றும் நிர்வாக நடைமுறைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

163 சமையலறைகள் மற்றும் உணவக அலகுகளில் இண்டக்ஷன் அல்லது பிற மின்சார அடிப்படையிலான சமையல் அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பேன்ட்ரி பெட்டிகளில் தீயில்லா சமையலுக்கு அனுமதி வழங்கப்பட்டதன் காரணமாக, நாளொன்றுக்கு பயன்படுத்தப்படும் வணிக எல்பிஜி சிலிண்டர்களின் எண்ணிக்கை 1,111இலிருந்து 458 ஆக குறை ந்துள்ளது.

சமைத்த உணவின் மீதான சார்பைக் குறைக்கும் வகையில், Ready to Eat (RTE) உணவுப் பொருட்களின் பயன்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வே முழுவதும் உணவக சேவைகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் கேள்விகளுக்கு ஒன்றிய அமைச்சகம் பதிலளித்துள்ளது.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செ.இராமலிங்கம், கோவி. செழியன் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரெங்கசாமி, மாவட்ட கழக பொருளாளர் நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## நாடு முழுவதும்

# ரயில்வே நவீனமயமாக்கல் திட்டத்தில் முன்னேற்றம் உள்ளதா?

### மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை.24 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஜூலை 22, 2026 அன்று மக்களவையில், நாடு முழுவதும் ரயில்வே நவீனமயமாக்கல் திட்டங்களின் முன்னேற்றம், உயர் வேக மற்றும் மேம்படுத்தப்பட்ட வேக ரயில் சேவைகள், வந்தே பாரத் மற்றும் அம்ரித் பாரத் ரயில்கள், அதிவேக ரயில் திட்டங்கள், பயணிகள் பாதுகாப்பு, தொழில்நுட்ப மேம்பாடுகள், ரயில் நிலைய மேம்பாடு மற்றும் எதிர்கால ரயில்வே நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் குறித்து ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலி பரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலி பரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

பயணிகள் பாதுகாப்பு, வேகம், இயக்கத் திறன், பயண வசதி மற்றும் நவீன தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் ரயில்வே நவீனமயமாக்கல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று அமைச்சர் தெரிவித்தார். உள்நாட்டிலேயே வடிவமைத்து தயாரிக்கப்பட்ட வந்தே பாரத் (இருக்கை மற்றும் படுக்கை வசதி), அம்ரித் பாரத் மற்றும் நமோ பாரத் விரைவு ரயில்கள் இயக்கப்பட்டு வருவதாகவும், தற்போது 162 வந்தே பாரத் ரயில் சேவைகளும், 36 இருவழி அம்ரித் பாரத் ரயில் சேவைகளும் இயக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**மாற்றுத் திறனாளிகளுக்கு வசதிகள்!**

அம்ரித் பாரத் ரயில்களில் 11 பொது வகுப்புப் பெட்டிகள், 8 படுக்கை வசதிப் பெட்டிகள், ஒரு உணவுப் பெட்டி மற்றும் இரண்டு சுமை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்டிகள் இடம்பெற்றுள்ளன என்றும் தெரிவித்தார். கவச் பாதுகாப்பு அமைப்பு, தானியங்கி கதவுகள், கண்காணிப்பு கேமராக்கள், மேம்பட்ட தீ பாதுகாப்பு, அவசர தொடர்பு வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு நவீன அம்சங்கள் இந்த ரயில்களில் இடம்பெற்றுள்ளன என்றும் கூறினார்.

முதல் வந்தே பாரத் படுக்கை வசதி ரயில் 2026 ஜனவரி 22 முதல் சேவையைத் தொடங்கியுள்ளதாகவும், புறநகர் மற்றும் குறுகிய தூரப் பயணிகளுக்காக தற்போது இரண்டு இருவழி நமோ பாரத் விரைவு ரயில் சேவைகள் இந்திய ரயில்வே வலையமைப்பில் இயக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், "நமோ கிரீன் ரயில்" என்ற நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில் 2026 ஜூலை 17 அன்று அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், உலகின் மிக நீளமான மற்றும் அதிக திறன் கொண்ட அகலப்பாதை ஹைட்ரஜன் ரயிலான இது கார்பன் டை ஆக்சைடு வெளியீடு இல்லாத சுற்றுச்சூழலுக்கு உகந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகவும் கூறினார்.

508 கிலோமீட்டர் நீளமுள்ள மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் திட்டம் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், திட்டத்திற்குத் தேவையான நிலம் முழுமையாக கையகப்படுத்தப்பட்டு அனைத்து சட்ட அனுமதிகளும் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், 2026-27 ஒன்றிய வரவு-செலவுத் திட்டத்தில் மும்பை-புனே, புனே- ஹைதராபாத், ஹைதராபாத் - பெங்களூரு, ஹைதராபாத் - சென்னை, சென்னை-பெங்களூரு, டெல்லி -வாரணாசி மற்றும் வாரணாசி -சிலிகுரி ஆகிய ஏழு புதிய அதிவேக ரயில் வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதிவேக ரயில்களுக்குத் தேவையான தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் திறனும் நாட்டிலேயே மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

**தானியங்கி ரயில் பாதுகாப்பு!**

ரயில்வே பாதுகாப்பை வலுப்படுத்த செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஆய்வு அமைப்புகள், கவச் தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பு, நவீன சமிக்ஞை மற்றும் தண்டவாள கண்காணிப்பு தொழில்நுட்பங்கள் விரிவு படுத்தப்பட்டு வருவதாகவும், 2026 ஜூலை 13 நிலவரப்படி 2,490 வழித்தட கிலோ மீட்டரில் கவச் அமைப்பு செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1,340 ரயில் நிலையங்கள் மேம்படுத்துவதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளதுடன், அவற்றில் 261 நிலையங்களின் மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்து ள்ளன. பயணிகள் வசதிகள், நடைமேம்பாலங்கள், மின்தூக்கிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் பன்முகப் போக்குவரத்து இணைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 2026-27 நிதியாண்டில் 11,972 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஜூன் மாதம் வரை 4,633 கோடி செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆளில்லா அனைத்து இருப்புப்பாதை கடவைகளும் அகற்றப்பட்டுள்ளதுடன், ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப் பாலங்கள் அமைக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2014 முதல் 2026 மே மாதம் வரை 14,451 ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பா லங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், 2026 ஜூன் 1 நிலவரப்படி சுமார் 31,17,492 கோடி மதிப்பில் 4,993 மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலத் திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருவதாக ஒன்றிய அரசின் ரயில்வே, தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள், பதிலளித்துள்ளார்.

## ஒன்றிய அரசினால்

# மருந்துப் பொருட்கள் தயாரிப்பதற்கான ஊக்கத் தொகை முழுமையாக வழங்கப்படாதது ஏன்?

### மாநிலங்களவையில் – எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 24 -

திராவிட முன்னேற்றக் கழக, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஜூலை 21 அன்று மாநிலங்களவையில் மருந்துப் பொருட்கள் உற்பத்திக்கான ஊக்கத்தொகை, ஒன்றிய அரசினால் முழுவதுமாக செலவழிக்கபடாதது ஏன் என்றும். இந்த நிதியை முழுவதுமாக தயாரிப்பாளர்களுக்கு கிடைக்க செய்ய ஏதேனும் முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளதா என்றும் வெளிநாட்டு இறக்குமதியை குறைத்திட ஆவன செய்யப்படுமா என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேலிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:


மருந்துப் பொருட்கள் துறையில் ஒரு சில திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு முழுமையாக செலவிடப்படவில்லை என்று இத்துறையின் நாடாளுமன்ற நிலைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது என்றும், மருந்து பொருள்களுக்கான உற்பத்தி ஊக்கத் தொகை குறைவாகவே செலவிடப் பட்டுள்ளது என்றும், மொத்தமாக மருந்துப் பொருட்கள் தயாரிக்கவும், மருந்து உபகரணங்கள் பூங்காக்களை அமைக்கவும் ஒன்றிய அரசு நிதியுதவி அளித்து வருவதாகவும், ரூபாய் 25360 கோடிகள் அளவிற்கு விற்பனை சாத்தியமாகியுள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும். மருத்துவ உபகரணங்களின் ஏற்றுமதி கடந்த 2024-25 ஆண்டில் ரூபாய் 41500 கோடிகள் அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும்,யூரியாவின் உர உற்பத்தி314 இலட்சம் மெட்ரிக் டன்கள் அளவிற்கு உயர்ந்துள்ளது என்றும் பாஸ்பேட் மற்றும் பொட்டாசிய உர வகைகளுக்கான மானிய உதவியை ஒன்றிய அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் தயாரிப்பாளர்களுக்கு 8 சதவீதம் முதல் 12 சதவீதம் வரை இலாபம் கிடைக்கும் வகையில் பல்வேறு கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டு உரத்துறையின் வளர்ச்சிக்கு தேவையான அனைத்து முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ளது என்றும் ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

**ஜூலை 24 (2009)**



கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.

பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**